ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்

மலர் : 7 இதழ் : 8 ஜூன் – 2011



*சுதேச ஊழியர் சாட்சி*

# Rev. ரத்தன் மாவி




## குஜராத்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! என்னுடைய பெயர் ரத்தன் மாவி. நான் குஜராத் மாநிலத்தில், தாகோத் மாவட்டத்திலுள்ள போர்கேடா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான் இயேசு கிறிஸ்துவைக் குறித்து ஒரு முறை கூட கேள்விப்படாமல் துர் தேவதைகளை தெய்வமாக வணங்கி அவைகளின் மீது அசைக்க முடியாத அளவு நம்பிக்கை வைத்திந்தேன். நானும் எனது குடும்பத்திலுள்ள அனைவரும் விக்கிரக ஆராதனை மற்றும், விக்கிரகங்களுக்காக விரதம் போன்ற காரியங்களை பய பக்தியுடன் செய்து வந்தோம். வருடத்திற்கு ஒரு முறை ஆடுகளை வெட்டி பலி கொடுத்து வணங்கி வந்தோம். எங்கள் கிராமத்தில் நடைபெறும் விக்கிரக ஆராதனை மற்றும் விழாக்களுக்கு எனது குடும்பம்தான் முழு பொறுப்பேற்று நடத்தி வந்தது. ஆனால் எங்கள் உள்ளத்திலும், இல்லத்திலும் சமாதானம் இல்லாமல் வாழ்ந்து வந்தோம். எனது தாயார் ஒவ்வொரு பண்டிகையின் போதும் அசுத்த ஆவியினால் பீடிக்கப்பட்டு பைத்தியம் பிடித்தது போலாகி அனைவருக்கும் தொந்தரவு கொடுப்பார்கள். நானோ சாராயம் குடித்தல், விபச்சாரம் செய்தல், பிறரை துன்புறுத்தி வாழ்தல் போன்ற பாவங்களைச் செய்து வந்தேன். இந்த சூழ்நிலையில் நானும் அசுத்த ஆவியினால் பீடிக்கப்பட்ட எனது சரீரமும் சுகவீனப்பட்டது. ஒரு முறை தீராத காய்ச்சலால் மிகவும் அவதிக்குள்ளானேன். இந்த நிலையில் எனது கிராமத்திற்கு அருகிலுள்ள லிலோர் என்ற கிராமத்தில் நடைபெற்று வரும் கூட்டத்தையும், அங்கு நடைபெறும் அற்புதங்களையும் குறித்துக் கேள்விப்பட்டு அங்கு சென்று கூட்டத்தில் கலந்து கொண்டேன். ஜீவனுள்ள தேவனின் வார்த்தைகள் என்னுள்ளத்தில் பேச ஆரம்பித்தன. நான் ஒரு பாவி என்று உணர்த்தப்பட்டு ஆண்டவரிடம் அழுது பாவமன்னிப்பையும் இரட்சிப்பையும் பெற்றுக் கொண்டேன். எனது வீட்டில் சமாதானமும் சந்தோஷமும் நிலவ ஆரம்பித்தது. ஒரு நாள் சபையில் நடைபெறும் இரவு கூட்டத்தில் கலந்து கொண்டேன். அப்பொழுது தேவன் என்னை தமது பரிசுத்த ஆவியினால் அபிஷேகித்து, பலப்படுத்தி ஊழியத்திற்கு அழைத்தார். அழைப்பினை ஏற்று ஷாலோம் குறுகிய கால வேதாகமப் பயிற்சியில் பயிற்சி பெற்று ஊழியத்தினை ஆரம்பித்தேன். மேலும் 1997–ல் இயேசு அழைக்கிறார் வல்லமை பயிற்சி முகாமில் பங்கு பெற்று ஆவிக்குரிய வரங்களைப் பெற்றுக் கொண்டேன். மேலும் 20.11.2009 அன்று ஷாலோம் போதகராக பிரதிஷ்டை செய்யப்பட்டு ஊழியம் செய்து வருகின்றேன். எனக்காகவும் எனது குடும்பத்திற்காகவும், நாங்கள் செய்து வரும் ஊழியத்திற்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Mr. Prince Jawahar - Chennai**

# உங்கள் சகோதரனிடமிருந்து....



***கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!***

**“ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்”!**

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்!

தேவ கிருபையால் ஜுன் மாதத்தில் பிரவேசிக்கிறபடியால் தேவனைத் துதிப்போம். தேவ கிருபையாலும், உங்கள் அனைவரின் ஜெபங்களினாலும், ஊக்கமான ஆதரவினாலும் ஊழியங்களை பீல் மக்கள் மத்தியில் சிறப்பாக செய்து வருகிறோம். மே மாதம் 5ம் தேதி முதல் 14ம் தேதி வரை குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சுமார் 600 கிராமங்களில் CBC (Children Bible Class) நடத்த தேவன் கிருபை தந்தார். சுமார் 30000க்கும் அதிகமான ஆதிவாசி சிறுவர்கள் இதன் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். **“ஜீவனுள்ள தேவ வார்த்தைக்கு”** தங்களை அர்ப்பணித்தார்கள். தொடர்ந்து இந்த ஊழியங்களைத் தாங்கிய உங்கள் யாவருக்காகவும், முன்னின்று நடத்திச் சென்ற தேவ பிள்ளைகளுக்காகவும் தேவனைத் துதிக்கிறோம்.

ஜுன் மாதத்தில் உங்கள் பிள்ளைகளுக்காக பள்ளிக்கூடம், கல்லூரிகள், மற்றும் நல்ல வேலைகள் தேடி வருகின்றீர்கள். உங்களுக்காக கருத்துடன் ஜெபித்து வருகின்றேன். தேவன் கட்டாயமாக நல்ல தேர்வு முடிவுகளை உங்கள் பிள்ளைகளுக்குத் தந்து மேற்படிப்பிற்கான வாசல்களையும் திறந்து, தேவைகள் யாவையும் சந்திப்பார். **“என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்”** எரே. 31:14

அதே போல் நம் பீல் ஆதிவாசி ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் பிள்ளைகள் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு தேர்வு எழுதி மேற்படிப்பிற்காக காத்திருக்கின்றனர். இந்த பிள்ளைகளுக்கான நிதி உதவிகள் கிடைக்கப்பெற மறவாமல் ஜெபியுங்கள். இக்கடிதத்தையும், மலர் உள்ளாக எழுதப்பட்டுள்ள சிறப்பு தேவை கடிதத்தையும் வாசித்து ஆவியானவர் ஏவுகிறபடி இந்த பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு உதவி புரிய அன்புடன் கேட்கிறேன்.

மேலும் ஜுலை 1ம் தேதி ஷாலோம் ஊழியத்தின் 20ம் வருட நிறைவைக் காண்கிறோம். அதற்காக விஷேசித்த 20 வருட மலர் (அனைத்து சாட்சிகள் மற்றும் நிகழ்வுகளுடன்) மேலும் ஊழியத்தை பற்றிய சிறப்பு DVD ஒன்று வெளியிட பிரயாசப்பட்டு வருகிறோம். மேலும் தூத்துக்குடி,

நெல்லை, மார்த்தாண்டம், கோவை, சென்னை ஆகிய பகுதிகளில் ஷாலோம் அறிமுக மற்றும் 20 வருட நிறைவு சிறப்புக் கூட்டங்கள் நடத்த உள்ளோம். ஷாலோம் ஊழியத்தின் 2020 தரிசனத் திட்டங்களான 10 இலட்ச ஆத்துமாக்கள், 2000 சபைகள், 2000 பீல் சுதேச ஊழியர்கள் திட்டம் நிறைவேற்றப்பட உங்களுடைய ஜெபங்களும், அநேக ஜெபப் பங்காளர்களும், 5 மடங்கு ஆதரவாளர்களும் எழும்ப ஜெபியுங்கள்.

மூன்று மாநிலங்களிலும் சுமார் 20 கிராமங்களில் கட்டப்பட்டு வரும் கிராம ஆலய கட்டுமான பணிகளுக்காக ஜெபியுங்கள். மேலும் CBN ஸ்தாபனத்தின் மூலமாக மே மாதம் குஜராத்தில் 25 ஆழ்குழாய் கிணறு கை பம்புகளும், ஜூன் மாதம் மத்தியப்பிரதேசத்தில் 25 ஆழ்குழாய் கிணறு கை பம்புகளும், நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. சேவா பாரத் இயக்கம் மூலமாக மூன்று மாநிலங்களிலுமுள்ள 30 சுதேச ஊழியர்களுக்கான ICT பயிற்சியும், குஜராத், மத்தியப்பிரதேசத்தில் மொத்தம் 60 இடங்களில் நடைபெற்று வரும் முதியோர் கல்வித் திட்டம் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள். இந்த மாதம் புதிய ஊழியர்கள் 35 பேர் தெரிந்தெடுக்கப்பட்டு, 1 மாத பயிற்சியளிக்கப்படவுள்ளார்கள், இதற்காகவும் ஜெபியுங்கள்.

எனது மூத்த மகன் கிளாட்சன் டைட்டஸ் MBA படிப்பை முடிக்கவும், இரண்டாவது மகன் பிரைட்சன் ஷாலோம் B.Tech (Media) படிப்பை முடிக்கவும் தேவன் கிருபை தந்தார். எனது மகள் ஜாய் ஷெக்கினா ரஷ்யாவில் மருத்துவ படிப்பு முதல் வருடத்தை பூர்த்தி செய்ய இருக்கிறாள். இவர்களுக்காகவும் இவர்களுடைய எதிர்காலத்திற்காகவும் ஜெபியுங்கள். மேலும் எனக்காகவும், எனது மனைவி வஹிதாவிற்காவும், எங்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

***“அவர்கள் சந்ததியானது ஜாதிகளின் நடுவிலும், அவர்கள் சந்தானமானது ஜனங்களின் நடுவிலும் அறியப்பட்டிருக்கும்; அவர்களைப் பார்க்கிற யாவரும் அவர்கள் கர்த்தரால் ஆசீர்வாதம் பெற்ற சந்ததியென்று அறிந்துகொள்வார்கள்”.***

**ஏசாயா 61 : 9**

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(Rt.Rev.Dr.V. தேவதாஸ்)

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**

# ஆவியையும், ஆசீர்வாதத்தையும் ஊற்றும் ஆண்டவர்

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

**"உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்". –** ஏசாயா 44:3

கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே, நாம் வாழ்கின்ற கடைசி நாட்களிலே, அதாவது கிறிஸ்துவின் வருகை மிக சமீபம் என்று அவர் வருகையை எதிர்பார்த்திருக்கும் நாம், நம் தலைமுறையில் தேவன் மிகப்பெரிய எழுப்புதலைக் கட்டளையிடுவார் என்று விசுவாசிக்கிறோம். இந்த கடைசி நாட்களுக்கான அநேக தீர்க்கதரிசனங்கள், காரியங்கள் நிறைவேறி வரும் போது தேவன் தந்த வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார்.

**"நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்வார்கள்"** (யோவேல் 2:8) என்ற வாக்குத்தத்தத்தை நம் சந்ததிக்கு தேவன் தருகிறார். ஆகவே தான் உன் சந்ததியார் மேல் என் ஆவியை ஊற்றுவேன் என்கிறார். ஏனெனில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு நாம் ஆயத்தமாகும்படி, பரிசுத்தமாகும்படி, சாட்சியாக நீடிக்கும்படி அநேகரை ஆயத்தப்படுத்தும்படி அவருடைய ஆவியின் அபிஷேகத்தை நம் தலைமுறையில் நம் சந்ததிக்கு ஊற்றுகிறார்.

வேதத்தில் கிறிஸ்துவின் முதல் வருகைக்கு ஆயத்தமாகும்படி பரிசுத்த ஆவியானவர் அநேகர் மீது வந்து இறங்கினார் என்பதை தேவன் பயன்படுத்திய பாத்திரங்கள் மூலமாக காண்கிறோம். அப்படியாக தேவன் பயன்படுத்திய பாத்திரமாகிய யோவான் ஸ்நானகனை குறித்து நாம் தியானிப்போம்.

குறிப்பாக கிறிஸ்துவின் முதல் வருகைக்கு ஆயத்தப்படுத்த தேவன் யோவான் ஸ்நானகனை தெரிந்தெடுத்தார். அவனை இந்த உலகத்தில் பிறக்க வைப்பதற்கு தேவன் ஒரு தம்பதியரை தெரிந்தெடுத்திருக்கிறார். முழு இஸ்ரவேல் ஜனத்தை தேவன் கண்ணோக்கிப் பார்த்தபோது தேவன் தெரிந்து கொண்ட குடும்பம் சகரியா எலிசபெத் குடும்பம் என்பதை பார்க்கும்போது மிகவும் ஆச்சரியமாக உள்ளது. எத்தனையோ இளம் தம்பதியர்கள் வாழும்போது தேவன் வயதான இக்குடும்பத்தை ஏன் தெரிந்து கொண்டார்.

✞ இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படி நடந்தவர்கள்.

✞ இருவரும் கர்த்தருடைய நியமங்களின்படி நடந்தவர்கள்.

✞ இருவம் தங்களுடைய வாழ்வில் குற்றமற்றவர்களாய் வாழ்ந்தார்கள்.

✞ இருவரும் தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாக இருந்தார்கள்.

✞ இருவரும் புத்திர பாக்கியம் இல்லையென்றாலும் இல்லற வாழ்வில் இன்பமான இனிய வாழ்கையை நடத்தினார்கள்.

✞ தேவன் கர்ப்பத்தின் கனியை தரவில்லை என தேவனுக்கு விரோதமாக முறுமுறுக்கவும், அதைக் குறித்துக் கவலைப்படவும் இல்லை.

✞ இருவரும் தங்கள் ஊழிய காலத்தை சரியாக நிறைவேற்றினார்கள்.

உலகத்தின் பார்வையில் ஊழியம் செய்து ஓய்வு பெற்றாலும் தேவனுடைய பார்வையில் இன்னும் தேவன் பயன்படுத்த சித்தமானார். எனக்கன்பானவர்களே சகரியா – எலிசெபெத் தம்பதியரைப் போல நம் ஊழியம், நம் இல்லற வாழ்வு இருக்குமானால் உங்களுக்குத் தேவன் ஓய்வே தரமாட்டார். இரண்டு பேர் சரீரத்தையும் புதுப்பித்து, புது பெலன் அளித்து இன்னும் பயன்படுத்தினார். தம்முடைய ஒரே பேரான குமாரன் இயேசு கிறிஸ்துவின் முதல் வருகைக்கு வழியை ஆயத்தப்படுத்த யோவான் ஸ்நானகனை பெற்றெடுக்கும் பாக்கியத்தை தேவன் தந்தார்.

அது போல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுத்த உங்கள் சந்ததியை, பிள்ளைகளை கட்டாயம் பயன்படுத்த விரும்புகிறார். பிள்ளைகள் தேவன் தரும் ஆசீர்வாதம், பலன் எனவே நம் தலைமுறை மூலமாக தேவன் பெரிய காரியங்களை நடப்பிப்பாராக! இந்த யோவான் ஸ்நானகனைப் பற்றி நாம் தியானிப்போம். அப்படி தியானிக்கும் போது தேவன் தம்முடைய அளவில்லாத அபிஷேகத்தை நம் தலைமுறை மேல் ஊற்றி, ஆயத்தப்படுத்துவாராக! யோவான் ஸ்நானகனைப் பற்றி கூறின ஆசீர்வாதங்கள் தேவன்தாமே நம் அனைவருக்கும் தந்தருள்வாராக!

### 1. உனக்கு (பெற்றோருக்கு) சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

(லூக்கா 1:14)

முதலாவதாக தேவன் நமக்கு பிள்ளைகளை தரும் போது அவர்கள் நமக்கு சந்தோஷமாக, மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். ஒரு குடும்பத்தில் ஒரு கர்ப்பத்தின் கனி பிறக்கும் போது மிகுந்த எதிர்பார்ப்புடனும் ஆசையுடனும் காத்திருப்பார்கள். பிள்ளை பிறந்தவுடன் மிகுந்த

மகிழ்ச்சி உண்டாகும். ஆனால் அநேக பிள்ளைகள் வளர, வளர பெற்றோர்கள் வேதனைப்படும் அளவிற்கு கர்த்தரை விட்டு வழி விலகி தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்கிறார்கள். நாம் சோர்ந்து போகாதபடி தேவனிடத்தில் தொடர்ந்து இவ்வாக்குத்தத்தத்தைப் பிடித்து ஜெபிப்போம். நமக்கு அன்பான Dr. பால் தினகரன் அவர்களைக் குறித்து அவர்கள் தாயார் Dr. ஸ்டெல்லா தினகரன் அவர்கள் இவ்வாறாக சாட்சி கொடுக்கிறார்கள் : வாலிபப் பிராயத்தில் Dr. பால் தினகரன் தேவனை விட்டு தூரமாக இருந்த நாட்களில் நான் விட்ட கண்ணீரால் மட்டுமல்லாது அநேக தேவ பிள்ளைகளின் ஜெபத்தினாலும் தேவன் அவரை விடவில்லை. Dr. பால் தினகரன் அவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட, தாயின் கர்ப்பத்தில் தேவன் அழைத்த பாத்திரமல்லவா? ஏற்ற நேரத்தில் தேவன் அவர்களைத் தொட்டார், இரட்சித்தார். ஊழியத்திற்கு அழைத்து அபிஷேகித்தார். இன்று உலக அளவில் தேவன் பயன்படுத்தி வருகிறார். அந்த நாளை அவர்கள் பெற்றோர் பார்த்த போது அவர்களுக்கு எத்தனை சந்தோஷம், மகிழ்ச்சி உண்டாயிருக்கும். அப்படியே அவர் உங்கள் பிள்ளைகளையும் கட்டாயம் தொடுவார், இரட்சிப்பார், அபிஷேகிப்பார், பயன்படுத்துவார். உங்கள் பிள்ளைகள் மூலம் உங்களுக்கு சந்தோஷம், மகிழ்ச்சி உண்டாகும்.

நான் ஒரு நல்ல பக்தி ஒழுக்கமுள்ள CSI குடும்பத்தில் பிறந்து கிறிஸ்தவ மார்க்கத்தில் வளர்க்கப்பட்டாலும், அநேக சூழ்நிலைகள் காரணமாக நான் தேவனைவிட்டு தூரமாக வாழ்ந்தேன். பெற்றோருக்குத் தேவையற்றவனாக வாழ்ந்தேன். அங்கும் இங்கும் அலைந்து வேதனைப்பட்டு, வீட்டை விட்டுத் தூரமானேன். ஆனால் தேவன் அவருடைய அநாதி கிருபையால் என்னை இரட்சித்து, அபிஷேகித்து ஊழிய அழைப்பைத் தந்து குடும்பமாக ஒரு ஜாதி (பீல்) மக்களுக்கு ஆசீர்வாதமாக பயன்படுத்தி வருகிறார். என் வாலிப நாட்களில் என்னைக் குறித்து வேதனைப்பட்ட என் தகப்பனார், ஊழியப்பாதையில் கடந்து வந்த நாட்களில் என்னை அழைத்து தேவன் எனக்குத் தந்த எட்டு பிள்ளைகளில் நீ தான் எனக்கு மிகவும் சந்தோஷமும், மகிழ்ச்சியுமானவன் என்று சொன்னது மட்டுமல்லாமல், எழுதியும் வைத்தார்கள். நிச்சயமாகவே உங்கள் பிள்ளைகளை தேவன் அப்படியே ஆசீர்வதிப்பார்.

மட்டுமல்லாமல் யோவானின் பிறப்பினிமித்தமாக அநேகர் சந்தோஷப்படுவார்கள் என்று தேவன் கூறினார். அவன் பெற்றோருக்கு மட்டுமல்ல, அநேகரை சந்தோஷப்படுத்துகிற மகனாக விளங்கினான். எனக்கன்பானவர்களே, நம்முடைய வாழ்க்கையில் பல்லாயிரம் ஜனங்களை சந்தோஷமாக இருக்கச் செய்ய வேண்டும். நம் வாழ்வில் நம் நிமித்தமாக யாரும் கண்ணீர் விடக்கூடாது. வேதனைப்படக்கூடாது. தேவ கிருபையால் சுமார் 25,000 பீல் ஆதிவாசி குடும்பங்கள் எங்கள் குடும்பத்தின் மூலமாக சந்தோஷமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாக

சமாதானமும் பெற்று ஆனந்தமாக தேவனை ஆராதித்து வருகிறார்கள். நாமும், நம் தலைமுறையும், நம் பெற்றோருக்கும், குடும்பத்தாருக்கும், சபைக்கும் தேசத்திற்கும் சந்தோஷமாக, சந்தோஷத்தைக் கொடுப்பவர்களாக தேவன் நம்மை ஆசீர்வதிப்பாரபாக!

**2. அவன் கர்த்தருக்கு முன்பாக பெரியவனாயிருப்பான், திராட்சரசமும் மதுவும் குடியான்.** (லூக்கா 1:15)

யோவான் ஸ்நானகனைப் பற்றி அவன் பிறப்பதற்கு முன்பாகவே தேவன் அவனைக் குறித்து என்ன சொல்கிறார்? அவன் கர்த்தருக்கு முன்பாக பெரியவனாயிருப்பான். தேவன் நம் பிள்ளைகளை அப்படியாக பெரியவர்களாக மாற்ற விரும்புகிறார். ஆபிரகாமின் சந்ததியான ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு இவர்களை கவனித்துப் பாருங்கள். தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றவர்களாய் இருந்தார்கள். கர்த்தருக்கு முன்பாக பெரியவனாக இருப்பதற்கு வேதம் சொல்லுகிறது, அவன் திராட்சை ரசமும் மதுவும் குடியான். நிச்சயமாகவே பெற்றோருக்குப் பிள்ளைகள் பற்றிய காரியங்களை தேவன் சொல்லித் தருகிறார். வழிநடத்துகிறார். சகரியாவும் – எலிசெபெத்தும் அதை மனதில் கொண்டவர்களாய் யோவான் பரிசுத்த பாதையில் நடத்தினார்கள். உலக இச்சைகளான திராட்சைரசம், மது இவைகளை குடிக்கவில்லை. ஆகவேதான் யோவான் தேவனுக்கு முன்பாக பெரியவனாகக் காணப்பட்டான்.

தேவன் எங்களுக்கு மூன்று பிள்ளைகளை தந்துள்ளார். மூன்றும் பேறும் பிறக்கும் பொழுது தேவன் இவர்களைக் குறித்த காரியத்தை தரிசனத்தின் மூலமாக, வார்த்தைகள் மூலமாக பேசினார். மூத்த மகன் டைட்டஸ் பிறக்கும் போது பிஷப் அசரியா அவர்கள் வந்து ஆசீர்வதிப்பதைக் காட்டினார். உண்மையாகவே வரும் காலங்களில் திருச்சபைகளுக்கு தலைவனாக, வழிநடத்தும் மேய்ப்பனாக கர்த்தர் நடத்துவார் என்பதை உணர்ந்து கொண்டோம். இரண்டாவது மகன் ஷாலோம் பிறக்கும் போது பிறந்த சில நிமிடங்களில் இயேசு கிறிஸ்து வெளிப்பட்டு அடுத்து பிள்ளை பெண் பிள்ளை பிறப்பாள் கவலைப்படாதே. இந்த மகனை நான் உங்களுக்குத் தருகிறேன் இவன் பில்லி கிரஹாம் போல் பெரிய சுவிசேஷகனாக மாறுவான். அது போல எனது மகள் ஷெக்கினா பிறக்கும் போது இந்த மகள் "கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பாய்" (ஏசா. 62:3) என்ற வசனத்தின்படி ஆசீர்வாதமாக இருப்பாள் என்று தேவன் விளம்பினார்.

பெற்றோராகிய நாங்கள் மூன்று பிள்ளைகளுக்கும் தேவன் தந்த தரிசனத்தை எடுத்துக் கூறி அவர்களை உற்சாகப்படுத்தி ஆவிக்குரிய பாதையிலே வளர்த்து வருகிறோம். இன்று வாலிப வயதில் தேவனுக்காக வாழ வேண்டும் என்று தேவ மகிமைக்காக வளர்ந்து வருகிறார்கள்.

நம் பிள்ளைகள் யாவரையும் ஆண்டவர் தமக்காக வாழ விரும்புகிறார். சரியான பாதையில் நாம் அவர்களை நடத்துவோம். ஆவிக்குரிய கிருபைகளை வேதன் தரும்படி அனுதினமும் அவர்களுக்காக ஜெபிப்போம்.

**3. தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்.** (லூக்கா 1:15)

தேவன் நம் பிள்ளைகளையும், சந்ததியையம் தாயின் வயிற்றில் இருக்கும்போதே பரிசுத்த ஆவியால் நிரப்ப வல்லவராயிருக்கிறார். உங்கள் குமாரரும், குமாரத்தியும் தீர்க்கதரிசனம் சொல்வார்கள் என்ற உரைக்கும் தேவன் நம் பிள்ளைகளை அவருடைய அபிஷேகத்தினால் நிரப்ப சித்தமுள்ளவராக இருக்கிறார்.

எலிசபெத் மரியாளின் வாழ்த்துதலைக் கேட்டவுடன், எலிசபெத் வயிற்றிலிருந்த பிள்ளையாகிய யோவான் துள்ளி குதித்தது என்று லூக்கா 1:41ல் வாசிக்கிறோம். விசுவாசிகளாகிய தாய்மார்கள் கர்ப்பத்தில் தேவன் பிள்ளைகளை தரும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும் கிருபையை தருகிறார். ஆகையால் பிள்ளைகள் உருவாகும் அந்த நாளிலிருந்து, தேவ வசனத்தை அதிகமாகய் வாசிக்க, ஜெபிக்க, ஆராதித்து பாடல்கள் பாடி தேவனை மகிமைப் படுத்தும் போது, கர்ப்பத்தின் கனியை தேவன் பரிசுத்தப்படுத்துகிறார். தமது பிரசன்னத்தினால் நிரப்புகிறார்.

கர்ப்பத்தில் இருக்கும்போதே, தேவன் எரேமியாவையும் தீர்க்கதரிசியாக பரிசுத்தப்படுத்தி தெரிந்து கொண்டேன் என்கிறார். நம்முடைய பிள்ளைகளும் அப்படியே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட விரும்புகிறார். மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்கிறார். நம் பிள்ளைகளைக் குறித்து டாக்டர் ஆக வேண்டும், இன்ஜினியர் ஆக வேண்டும், வெளி நாடு செல்ல வேண்டும், தொழிலில் முன் வர வேண்டும், என்ற உலக பணிகளில்லாமல் கிறிஸ்துவுக்காக சாட்சியாக வாழ வேண்டும் என்று விரும்புகிறோமா? இன்றே ஜெபியுங்கள் ஆவிக்குரிய வாழ்வில் அவர்கள் முன்னேற வழி காட்டுங்கள். யோவான் ஸ்நானகனைப் போல எலியாவின் ஆவியையும், பலத்தினையும் உடையவர்களாய் அவர்கள் எழும்பட்டும்.

**4. பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தை காத்திருக்க ஆயத்தப்படுத்தும்படியாக..** (லூக். 1:17)

முதல் வருகைக்கு கிறிஸ்துவண்டை அநேகரை யோவான் ஸ்நானகன் வழி நடத்தினார். இதோ கர்த்தருக்கு வழிய ஆயத்தப்படுத்துகிறவனாக, வழிகளை செவ்வைப் படுத்துகிறவனாக

காணப்பட்டான். அவன் மூலமாக அநேகர் கிறிஸ்துவண்டை நடத்தப்பட்டார்கள். **“அநேகர் அவரிடத்தில் வந்து: யோவான் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை; ஆகிலும் இவரைக்குறித்து யோவான் சொன்னதெல்லாம் மெய்யாயிருக்கிறது என்றார்கள். அவ்விடத்திலே அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.** (யோவான் 10:41,42) அநேகர் யோவானுடைய சீஷர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு கிறிஸ்துவின் சீஷர்களாயிருக்கிறார்கள்.

இன்று கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு திரளான மக்களை தேவனண்டை திரும்பும்படி தேவன் இன்று மனிதர்களைத் தேடுகிறார். உங்கள் பிள்ளைகளை தேவன் பயன்படுத்த விரும்புகிறார். முழு நேர ஊழியர்களாகவோ, அல்லது அநேக ஊழியங்களைத் தாங்கும் தூண்களாகவோ அநேக ஆத்துமாக்களை கிறிஸ்துவண்டை வழி நடத்த தேவன் அழைக்கிறார்.

1979ம் ஆண்டு தேவன் அடியேனை பெயர் சொல்லி அழைத்தார். என் வாழ்வில் அன்பும் சமாதானமும் அற்ற நிலையில் ஏன் உலகில் வாழ வேண்டும் என்ற மன பாரத்துடன் தற்கொலை செய்து உயிரை விட்டுவிட நினைத்து பியாசப்பட்டேன். ஆனால் தேவன் கிருபையாய் ஜீவனை மீட்டார். சுமார் 32 ஆண்டுகளுக்குப் முன்பாக அப்போஸ்தல ஜெப வீடு சபையில் ஒரு மூலையில் அமர்ந்து ஆராதிக்கும்போது தேவதாஸ் என்று மூன்று முறை பெயர் சொல்லி அழைத்தார். இன்று முதல் உன்னை ஆசீர்வதிப்பேன். இப்பாரத தேசத்தில் ஒரு ஜாதி மக்களுக்கு ஆசீர்வாதமாய் இருப்பாய். திரளான பீல் ஆதிவாசி மக்களை என்னிடமாகத் திருப்புவாய் என்று திருவுளம்பற்றினார். இன்று 20 வருடங்களில் எங்களை குடும்பமாக குடியிலும், வெறியிலும், கொள்ளையடிப்பதிலும் பிசாசின் பிடியிலும் வாழ்ந்து வந்த பீல் மக்களை கிறிஸ்துவண்டை திருப்ப தேவன் சித்தம் கொண்டார்.

எனக்கன்பானவர்களே, அருமை பெற்றோர்களே, வாலிப பிள்ளைகளே தேவன் இன்று நமக்குக் “உன் சந்ததியின்மேல் என் ஆவியை ஊற்றுவேன்” என்ற வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறார். வாஞ்சையுடனும் ஆத்தும தாகத்துடனும் ஜெபியுங்கள். இந்த நாட்களில் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் குறிப்பாக வாலிபப் பிள்ளைகள், சிறுவர்கள், மூப்பர்கள் மீது பரிசுத்த ஆவியின் அபிஷேகமும், ஆவியின் வரங்களும், தரிசனங்களும் கொடுக்கப்படுகிறது. ஆகவேதான் இவ்வளவு பெரிதான எழுப்புதலையும், அறுவடையையும் காணமுடிகிறது.

இப்படிப்பட்ட உண்மையான ஆசீர்வாதங்களை இம்மலரை வாசிக்கும் உங்கள் யாவருக்கும், குடும்பத்திற்கும் தேவன் கட்டளையிடுவாராக! இப்பொழுதே ஜெபியுங்கள். தேவன்தாமே உங்களையும், உங்கள் சந்ததியையும் பரிசுத்த ஆவியினால் நிரப்புவாராக! தேவன் தாமே அனைத்து உலகப்பிரகாரமான நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் தந்தருள்வாராக! ஆமென்

# CHILDREN BIBLE CLASS (CBC)

(úLôûPdLôX £ßYoLs úYRôLU YÏI×)

**<u>CBC அறிமுகம்</u>**

**"சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்;"** – மத்தேயு 19:14

இதுதான் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இருதய ஏக்கம். இந்த வசனத்தின் மூலம் இயேசு சிறு பிள்ளைகளை எவ்வாறு நேசிக்கிறார் என்பது தெரிய வருகிறது. ஏனென்றால் சிறு பிள்ளைகள் இருதயம் விளைவிக்கத் தயாராக இருக்கும் நல்ல நிலத்தைப் போன்றது. விதைத்த விதைகளை 100 மடங்காக விளையச் செய்து பலன் கொடுக்கும். காலங்கள் கடந்து போனாலும் விதைத்த இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் நிச்சயம் பலனைக் கொடுக்கும். ஆகவே பீல் மக்களின் இரட்சிப்பின் பணியில் மிக முக்கியமான ஒன்றான CBC ஆண்டுதோறும் சிறுவர்கள் மத்தியில் நடத்தப்பட்டு வருகிறது. அதேபோல் இந்த ஆண்டும் சுமார் 600க்கும் அதிகமான கிராமங்களில் 30000க்கும் அதிகமான சிறுவர்களுக்கு நடத்தப்பட்டது.

**<u>கருப்பொருள்</u>**

இந்த ஆண்டு ஆவியானவரின் ஒத்தாசையுடன் மே மாதம் 10 நாட்கள் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டது. இந்த ஆண்டின் கருப்பொருள் **"ஜீவ வார்த்தை"** என கொடுக்கப்பட்டு, இதற்கான புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டு, முறையே பாடங்கள் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு தேவனுடைய ஜீவ வார்த்தைகள் சிறுவர்களுக்கு கற்பிக்கப்பட்டது. இதில் 10 நாட்களுக்கும் ஒவ்வொரு வார்த்தையை தலைப்பாகக் கொடுத்து பாடங்கள் நடத்தப்பட்டன. அவை கீழ் வருமாறு:

| | | | | |
|---|---|---|---|---|
| நாள் – 1 | சங்கீதம் | 119 : 105 | – | **வெளிச்சம்** |
| நாள் – 2 | மத்தேயு | 4 : 4 | – | **அப்பம்** |
| நாள் – 3 | மத்தேயு | 7 : 24 | – | **கன்மலை** |
| நாள் – 4 | நீதிமொழிகள் | 2 : 6 | – | **ஞானம்** |
| நாள் – 5 | சங்கீதம் | 107 : 20 | – | **குணமாக்கும்** |
| நாள் – 6 | எரேமியா | 23 : 29 | – | **சம்மட்டி** |
| நாள் – 7 | எரேமியா | 23 : 29 | – | **அக்கினி** |
| நாள் – 8 | எரேமியா | 6 : 17 | – | **பட்டயம்** |

நாள் – 9 எரேமியா 19 : 7 – **உயிர்ப்பிக்கும்**

நாள் – 10 யோசுவா 1 : 8 – **வசனம் வாய்க்கப்பண்ணும்**

**பயிற்சி வகுப்புகள்**

இதில் முதற்கட்டமாக 18&19.04.2011 ஆகிய நாட்களில் குஜராத்தைச் சேர்ந்த 150 ஆசிரியர்களுக்கும், 25&26.04.2011 ஆகிய நாட்களில் மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த 230 ஆசிரியர்களுக்கும், 27–30.04.2011 ஆகிய நாட்கு நாட்களில் இராஜஸ்தானில் சுமார் 300 ஆசிரியர்களுக்கும் 2 கட்டமாக பயிற்சியளிக்கப்பட்டது. இப்பயிற்சி குரு நாடகங்கள், பாடல்கள், நடனங்கள் வாயிலாகவும் பெப்பட் ஷோ மூலமாகவும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் நடத்தப்பட்டது.

**CBC –ன் விளைவு**

மூன்று மாநிலங்களிலும் நடைபெற்ற இந்த CBC வகுப்புகளின் மூலம் சுமார் 30000–க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சிறுவர்கள் சந்திக்கப்பட்டுள்ளார்கள். 15.05.2011 ஞாயிறு அன்று CBC நிறைவு நாள் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் ஒவ்வொரு சிறுவர்களும் தங்களது தாலந்துகளை வெளிப்படுத்தினர்.

அநேக சிறுவர்கள் நன்னடத்தைகளைக் கற்றுக் கொண்டதாகவும், விசுவாசர்தில் வளர CBC உதவி செய்வதாகவும் சாட்சிகள் பகிர்ந்தனர். இன்னும் இந்த சிறுவர்கள் தேவனுக்குள் கட்டப்பட நமது ஜெபங்களும், உதவிகளும் தேவ ஆலோசனைகளும் அதிகமாக தேவைப்படுகிறது.

இந்த CBC வகுப்புகள் நல்ல சிறப்பான முறையில் நடைபெற உதவிக் கரம் நீட்டிய அனைத்து நல்ல உள்ளங்களும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்து, தேவனைத் துதிகிறோம்.

## *உங்கள் கவனத்திற்கு....*

தேவனுடைய பெரிதான கிருபையினால் நமது ஷாலோம் தலைமை அலுவலக ஊழியர்களை தேவன் ஜெபக்கூடுகைகள், வீட்டு ஜெபக் கூடுகைகள், ஞாயிறு ஆராதனைகள், மிஷனெரி தரிசன கூடுகைகள், மற்றும் உபவாச ஜெபங்களில் அநேக இடங்களில் பயன்படுத்தி வருகிறார்.

நீங்களும் உங்களது ஜெபக்கூடுகைகள், வீட்டு கூடுகைகள், உபவாச கூடுகைகள் மற்றும் ஞாயிறு ஆராதனைகள், சுவிசேஷக் கூட்டங்கள், நற்செய்திக் கூட்டங்கள், மிஷனெரி தரிசனக் கூடுகைகள் ஆகியவற்றில் ஷாலோம் ஊழியர்களைப் பயன்படுத்த விரும்பினால் எங்களோடு தொடர்பு கொள்ள அன்பாய் கேட்கிறோம்.

தொடர்புக்கு : சகோ. ரதீஸ் குமார், செல் : ***செல் : 9600695598***

# SHALOM CHARITY MISSION
## ஷாலோம் சேரிட்டி மிஷன்

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 19 ஆண்டுகளாக தேவன் தந்த Sharing Love Mission (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.

அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நமக்கு வரும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மேற்கண்ட திட்டங்களுக்காகவே செலவிடப்படுகின்றது. இன்னும் வரும் காலங்களில் மிக அதிக அளவில் இவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு **"கல்வி அறிவு வளர்ச்சி"** திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.


இதற்காக **Shalom Charity Mission –** என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. **Sharing Love Mission** சுவிசேஷப் பணி மற்றும் சபை காரியங்களை மட்டும் கவனித்து செயல்படும். **Shalom Charity Mission –** மற்ற சமுதாய முன்னேற்ற பணிகளையும், குழந்தைகளின் கல்விப் பணிகளையும் கருத்தாகத் திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும்.

Hostel பணி, Education பணி, Literature Fund மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி செய்யும்போது **Shalom Charity Mission –** என்ற பெயருக்கு அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

***மேலும் குழந்தை ஆதரவுத் தொகை*** அனுப்புவோர் **Shalom Charity Mission –** என்ற பெயருக்கே **D.D. or Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கி கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

# நினைவுப்படுத்துகிறோம்......



அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!

இந்த கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் உள்ள காணிக்கையை இந்த கல்வியாண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் படிப்பிற்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O, D.D, Cheque** மூலமாக **Sharing Love Mission** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன். உங்களுக்கு அதை திறக்க சாவி **(Key)** வேண்டுமானால் **9345675468 –** இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

## குஜராத் பணித்தளத்தில் மருத்துவ ஊழியம் செய்ய மருத்துவர் தேவை

*தேவ கிருபையினால் கடந்த 19 ஆண்டுகளில் நம் ஷாலோம் ஊழியங்கள் விரைவாக வளர்ந்து வருகிறது.* நமது ஊழியத்தில் ஷாலோம் சேரிட்டி மிஷன் சமுதாய பணிகளைச் செய்து வருகிறது. இதில் முக்கியமான பணி மருத்துவப் பணியாகும். இதற்காக நமது பணித்தளத்தில் **ஷாரோன் நினைவு மருத்துவமனை** நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதில் மார்த்தாண்டத்தைச் சேர்ந்த Dr. Sheju அவர்கள் கடந்த ஒரு ஆண்டாக அர்ப்பணித்து ஊழியம் செய்து வந்தார்கள். தற்போது அவர் மேற்படிப்பு படிக்கச் சென்ற காரணத்தினால், மருத்துவமனைக்கு ஒரு ஆண்டு, அல்லது இரண்டு ஆண்டு அல்லது முழுமையாகவோ **அர்ப்பணித்து ஊழியம் செய்ய மருத்துவர் தேவை. இதற்காக ஜெபியுங்கள். முன் வருவோர் எங்களை தொடர்பு கொள்ளவும்.**

**தொடர்பு கொள்ள வேண்டிய செல் போன் : 09377445468, 9345675468,**

## *தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கும்...*
## *குஜராத் பணித்தள அலுவலகத்திற்கும்...* ஊழியர்கள் தேவை...

**"அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்." மத்தேயு 9:37**

பீல் மக்கள் மத்தியில் தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டும் பணியில், எங்களுடன் இணைந்து ஊழியங்களை நிறைவேற்ற தூத்துக்குடி ஷாலோம் தலைமை அலுவலகத்திலும், குஜராத், தாகோத்திலுள்ள ஷாலோம் பணித்தள அலுவலகத்திலும் ஊழியம் செய்ய தேவ பிள்ளைகள் மிகவும் அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படுகிறார்கள்.

**தலைமை அலுவலகம் :–**

1. **நிதித் துறையை நிர்வகிக்க... B.com., முடித்து அனுபவமுள்ளோர் (Accounts Department)**
2. **தமிழ் & ஆங்கிலம் Typing தெரிந்தோர்... (Thanks Letter Department)**
3. **Shalom Charity Mission (Accounts Department)**

**பணித்தள அலுவலகம் :–**

1. **நிதித் துறையை நிர்வகிக்க... B.com., முடித்து அனுபவமுள்ளோர் (Accounts Department)**
2. **தமிழ் & ஆங்கிலம் Typing தெரிந்தோர்... (Report Department)**
3. **Media & Communication Director ஆக செயல்பட...**
4. **நமது பேராயர் Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்களுக்கு Personal Assistant ஆக செயல்பட...**
5. **சமையல் பணி செய்ய...**

இதற்காக பாரத்துடன் ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம். மேலும் ஊழியத்திற்கென்று அர்ப்பணித்த, தேவனால் அழைக்கப்பட்ட, ஊழிய வாஞ்சை உள்ளவர்கள் இதை ஒரு தேவனுடைய அழைப்பாகவும், அரிய வாய்ப்பாகவும் கருதி எங்களோடு தொடர்பு கொள்ள அன்பாய் கேட்கிறோம்.

**"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்." யோவான் 12:26**

**எங்களுடன் தொடர்பு கொள்ள**

| | | |
|---|---|---|
| | Cell : | 09377445468 - Bro. V. Devadass,<br>09345675468 - Bro. Sam Gunaseelan |

தலைமை அலுவலகம் : **Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. Tamil Nadu. Phone: 0461 - 2375468

## *ஷாலோம் ஆதரவாளர்கள் கவனத்திற்கு......*

### Online Fund Transfer

***கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,*** நீங்கள் ஜெபித்து தாங்கிவரும் காணிக்கையை எங்களது இணையதளம் மூலமாக எங்களுக்கு அனுப்புவதற்கான வழி வகை செய்யப்பட்டுள்ளது. எங்களது இணையதள முகவரி : **www.shalommission.in.** Net Banking, Credit Card & Debit Card வசதியுள்ளவர்கள், இந்த வசதியை பயன்படுத்தி ஆதரவு கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

## நீல்புரம் பரி. திரித்துவ தேவாலயத்தில் நடைபெற்ற **கன்வென்ஷன் கூட்டங்கள்**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால், தூத்துக்குடி மாவட்டம் நீல் புரத்திலுள்ள பரி. திரித்துவ தேவாலய வளகத்தில் வைத்து, மே 11 & 12 ஆகிய தினங்கள் கன்வென்ஷன் கூட்டங்கள் நடைபெற்றன.

இந்த இரண்டு நாள் கூட்டங்களிலும் நமது ஷாலோம் பிஷப் Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்கள் இறைச் செய்தியை பகிர்ந்தளித்தார்கள். 12 ம் தேதி அன்று சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் ஜனங்களின் ஆசீர்வாதத்திற்காக ஜெபித்தார்கள். இரண்டு நாள் கூட்டத்திலும் பாடல் மற்றும் ஆராதனை வேளைகளில் தேவ ஆவியானவர், இறங்கி வந்து அசைவாடினார். ஜெப வேளையில் பரிசுத்த ஆவியானவர் வந்திருந்த ஜனங்களை அபிஷேகித்தார். தேவனுடைய வார்த்தையை கேட்கும்படியாக ஆலய வளாகம் நிறையத்தக்கதாய் ஜனங்கள் அநேகர் கூடிவந்து, ஆசீர்வாதம் பெற்று திரும்பினர்.

இந்தக் கூட்டங்களை ஒழுங்கு செய்து ஷாலோம் ஊழியங்களுக்காக வாய்ப்பளித்த சபை மக்களுக்கும், நீல் புரம் சபையைச் சார்ந்த சகோ. செல்வக்குமார் (தாவனகரை) அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

***தேவனுக்கே மகிமை உண்டாவதாக!***

---

இயேசு அழைக்கிறார் மூலமாக நடைபெற்ற

## சுகமளிக்கும் ஆராதனை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால், தூத்துக்குடி விக்டோரியா பள்ளியில் வைத்து 07.05.2011 அன்று இரவு 7.00 மணிக்கு சுகமளிக்கும் ஆராதனை நடைபெற்றது. ஆராதனையில் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள், தேவ செய்தியளித்தார்கள். கூட்டத்தை ஒழுங்கு செய்த சகோ. ரத்தினகுமார் அவர்களுக்கும், சகோ. ஆரோன் அவர்களுக்கும் இயேசு அழைக்கிறார் ஊழியங்களுக்கும் நன்றி கூறுகிறோம். ***தேவனுக்கே மகிமை!***

## *உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள்...*

*அன்பான ஆதரவாளர்களே,*

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தாலோ, மேலும் உங்களது முகவரி மாறும்போதோ நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு எங்களிடம் உங்களது முகவரியில் திருத்தங்கள், மாற்றங்கள் அல்லது புது முகவரியை உடனடியாக தெரிவிக்க அன்பாய்க் கேட்கிறோம். இது நாங்கள் உங்களுடன் சரியாக தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும். மேலும் உங்களது தொலைபேசி எண்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

# Shalom CBC Directors Training





பாடல் மற்றும் ஆராதனை வேளை



Action Songs



பயிற்சியளிக்கும் சகோதரர்கள்






கலை நிகழ்ச்சிகள் வாயிலாக பயிற்சி





பயிற்சி பெற்றோர்

# மேல் படிப்பிற்காக காத்திருக்கும் நமது பீல் ஆதிவாசி சிறுவர்களில் சிலர்



Name
**Sonal Ben**
Father's Name
**Thersingh Damor**
Village
**Simaliya**
State
**Gujarat**
Education
**Nursing 1st Year**



Name
**Manisha Ben**
Father's Name
**Savsingh Damor**
Village
**Simaliya**
State
**Gujarat**
Education
**Nursingh 2nd yr**



Name
**Sarmistaben**
Father's Name
**Suresh Hathila**
Village
**Kathuvara**
State
**Gujarat**
Education
**DEC 2nd Year**



Name
**Rutha ben**
Father's Name
**Ramsu Damor**
Village
**Vankor**
State
**Gujarat**
Education
**Computer 2nd yr**



Name
**Veepisingh**
Father's Name
**Tharsingh Kattara**
Village
**Padla**
State
**Rajasthan**
Education
**College 1st Year**



Name
**Samuel**
Father's Name
**Samson Damor**
Village
**Vankol**
State
**Gujarat**
Education
**ITI 2nd year**



Name
**Mannu Bhai**
Father's Name
**Vestha Bariya**
Village
**Hirola**
State
**Gujarat**
Education
**Health Inspecter**



Name
**Davud Bhai**
Father's Name
**Mannu Bhabhor**
Village
**Chanasar**
State
**Gujarat**
Education
**ITI**





Name
**Immanuel**
Father's Name
**Masur Ganava**
Village
**Golana**
State
**Gujarat**
Education
**12th**



Name
**Deep Bhai**
Father's Name
**Puniya Mavi**
Village
**Nanikharej**
State
**Gujarat**
Education
**English 2nd Year**



Name
**Manishaben**
Father's Name
**Gorsingh Damor**
Village
**Burakuva**
State
**Gujarat**
Education
**B.A.,**



Name
**Mohan Bhai**
Father's Name
**Gorsingh Damor**
Village
**Burakuva**
State
**Gujarat**
Education
**College 2nd year**



Name
**Rakesh Bhai**
Father's Name
**Lalu Kattara**
Village
**Gunasiya**
State
**Gujarat**
Education
**Nursingh 2nd year**



Name
**Kama Ben**
Father's Name
**Amarsingh Mavi**
Village
**Borkheda**
State
**Gujarat**
Education
**Dip. in Agriculture**



Name
**Prithika Ben**
Father's Name
**Navalsingh Bilwal**
